www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

பதிவு எண் : 011061

*

## பதினொன்றாம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

8 x 1 = 8

I. பலவுள் தெரிக.

1. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று ______.

) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

2. i) 'பூ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமாவால் வெளியிடப்பட்டது.

ii) கவிதைக்கிரீடம் என்று போற்றப்படுவது ______.

) சிற்றிதழ் - குற்றாலக்குறவஞ்சி ஆ) கவிதைநூல் - திருச்சாழல்

இ) நாளிதழ் - நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல் - குற்றாலக் கோவை

3. "ஜனப்பிரளயம்" என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

4. ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது ஆகிய விரிசையில் புணர்ந்த சொல் ______.

அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

5. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் - ய... யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் - கவிஞரிடம் ஆ) மன்னர் - அமைச்சரிடம்

அமைச்சர் - மன்னரிடம் ஈ) மன்னர் - அமுதவல்லியிடம்

6. கூற்று 1 : தஞ்சை பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்.

கூற்று 2 : அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரஸ்கோ வகையைச் சார்ந்தவை.

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு

இ) கூற்று 1 தவறு 2 சரி கூற்று இரண்டும் சரி

7. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து புறம் சார்ந்த நூல்.

காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

அ) கூற்று சரி காரணம் தவறு ) இரண்டும் சரி

இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு காரணம் சரி

8. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.

அ) விரியன் - தண்டை

ஆ) திருகுமுருகு - காலாழி

இ) நாங்கூழ்ப்புழு - சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி - பாடகம்

அ) 3 4 2 1 ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

4 x 2 = 8

II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக.

9. இந்திய கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

10. அன்றொருநாள் ; நிழலிலிருந்து - தொடர் அமைத்து எழுதுக.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. அலைகடல் ; புதுக்கியவர் - இலக்கணக்குறிப்பு தருக.
12. பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?
13. "நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
14. செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் எழுதுக.

**III. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3x4=12**

15. ஃபிரஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறிப்பு நீவிர் அறிவன யாவை?
16. "சேர நாடு செல்வ வளம் மிக்கது" - என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் கூறுக.
17. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
18. உணவும் உறக்கமும் அணில் கனவாம் - உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.
19. ஜீவாவின் பேச்சு நடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3x2=6**

20. மூன்று நாட்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். ***(கலவைத் தொடராக மாற்றுக)***
21. ***பகுபத உறுப்பிலக்கணம் தருக : (ஒன்றனுக்கு மட்டும்)***
    i) உண்டான் ii) துய்த்தல்
22. ***புணர்ச்சி விதி தருக : (ஒன்றனுக்கு மட்டும்)***
    i) பயமில்லை ii) மண்ணுடை
23. ***தமிழ்ப்படுத்துக :***
    அ) Debate ஆ) Documentery
24. சேரன் வில் ; சோழன் ________, ________ மீன் .
    ***(விடுபட்ட இடத்தில் அடுத்து வரக்கூடிய சொல்லை எழுதுக)***

**V. கட்டுரை வடிவில் விடை தருக.** **2x5=10**

25. அ) கல்லும் கதை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

*(அல்லது)*

ஆ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கார் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

26. அ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும்? - விளக்குக.

*(அல்லது)*

ஆ) பாரதிதாசன் ஒரு "புரட்சிக்கவி" என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

**VI. அடிபிறழாமல், சீர் மாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

27. "சிற்றூரும் வரப்பெடுத்த........" எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதி "பா" வகையினைச் சுட்டுக.

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
Scanned with CamScanner